| MSSRF Science for Sustainable Development | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் : | மதுரை | காலம் : | 10/09/2022 | முதல் | 14/09/2022 |
| | அறிக்கை எண் : | 072/ 2022 | வெளியீட்டு நாள் : | | 09/09/2022 | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33° - 36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (04.09.2022 முதல் 08.09.2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 14-09-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 04/09 | 05/09 | 06/09 | 07/09 | 08/09 | தேதி | நாள்-1 10/09 | நாள்-2 11/09 | நாள்-3 12/09 | நாள்-4 13/09 | நாள்-5 14/09 |
| 2.7 | 20.2 | 0.7 | 4.1 | 0.3 | மழை (மி.மீ) | 6 | 6 | 4 | 4 | 4 |
| 34 | 36 | 33 | 34 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 34 | 34 | 35 | 35 | 35 |
| 25 | 24 | 24 | 24 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 24 | 24 | 24 | 25 | 25 |
| 4 | 5 | 6 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 4 | 4 | 4 |
| 65 | 72 | 68 | 84 | 66 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 56 | 80 | 79 | 69 | 54 | | 60 | 60 | 60 | 60 | 60 |
| 4 | 6 | 2 | 17 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 8 | 8 | 8 |
| வட கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | மேற்கு | வட மேற்கு | **காற்றின் திசை** | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

**குறுஞ்செய்தி** :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 34°-35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 24°-25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 கி.மீ வேகத்தில், தென்மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

மாவட்டத்தின் ஒருசில பகுதிகளில் மழை பெய்துள்ளமையாலும் தொடர்ந்து சில நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதாலும் இதுவரை உழவுபணிகளை மேற்கொள்ளாதவர்களும் விதைக்க துவங்காத விவசாயிகளும் தற்போது உழவுபணிகள் (ம) விதைப்பு பணிகளை மேற்கொள்ளலாம்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்** : பருத்தி, உளுந்து, கால்நடை.

### பருத்தி:

- பருத்தியில் சாறு உறிஞ்சும் பூச்சிகட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் மெட்டாரைசியம், 10 கிராம் வெர்ட்டிசீலியம் என்ற உயிரியல் மருந்துகளை கலந்து தெளிக்கலாம்.

### உளுந்து:

- உளுந்து மற்றும் பச்சை பயிருக்கு 2 சதம் டிஏபி கரைசலை பூக்கும் தருணத்தில் ஒரு முறையும் 15 நாட்கள் கழித்து மறுமுறையும் தெளிக்கவும்.
- (ஏக்கருக்கு 4.5 கிலோ 10 லிட்டர் தண்ணீரில் முதல் நாள் இரவு ஊறவைத்து பிறகு அடுத்தநாள் தெளிந்த நீரை வடிகட்டி 190 லிட்டர் தண்ணீருடன் கலக்கவும்)

### கால்நடை:

- கால்நடைகளைத் தாக்கும் குளம்பு சிதைவு நோய் தாக்குதல் பரவ வாய்ப்புள்ளது.
- இது எல்லா வயது கால்நடைகளையும் பாதித்தாலும், வயது முதிர்ந்த மாடுகளில் பாதிப்பு அதிகம் காணப்படும்.
- சுத்மில்லாத தொழுவத்தில் உள்ள ஈரமான சாணம், சேறு மற்றும் காலில் உள்ள புண்கள் ஆகிவைகளில் பாக்டீரியாக்கள் நன்கு தங்கி வளரும் இயல்புடையது.
- கால்நடை மருத்துவரை அணுகி சிகிச்சை அளிக்க வேண்டும்.